# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF : Sessions Court for trial of
Communal Clash Cases in Southern Districts
Madurai.

Calender : **SC.No. 2/2010**

Miscellaneous :

Preliminary Register :

Sessions :

Deposition of witness for **Prosecution அ.சா. 30**
**Defence Court**

Name : கோபாலகிருஷ்ணன்

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the day of **15.06.2022**

<u>முதல் விசாரணை</u>:

நான் தற்போது தென்காசி வஞ்சிநகரத்தில் குடியிருந்துவருகிறேன். நான் முன்பு தென்காசியில் கூலக்கடை பஜாரில் அரிசி வியாபாரம் செய்துவந்தேன். எதிரிகளை எனக்கு தெரியாது. தென்காசியில் உள்ள மவுண்ட்ரோடு தெரியாது. நான் 2007 ம் வருடம் அந்த இடத்தில் கடை நடத்தி வந்தேன். சுமார் 6 வருடங்கள் கடை நடத்தினேன். கடை திறந்த மூன்று மாதத்திற்குள்ளாக ஒரு சம்பவம் நடந்தது.

தென்காசியில் கொலை சம்பவம் 3 மாதத்திற்குள்ளாகவே நடைபெற்றது. நான் ஒருநாள் மதியம் 12.00 மணியளவில் நானாகவே கொலைசம்பவத்தை கேள்விபட்டதும் கடையை பூட்டிவிட்டு சென்றுவிட்டேன். என்னை போலீசார் விசாரித்தார்கள். கொலைநடந்ததாக கேள்விபட்ட உடனே கடையை பூட்டிவிட்டு ஓடிவிட்டேன். சம்பவம் பற்றி எதுவும் எனக்கு தெரியாது.

**இந்நிலையில், இந்த சாட்சியினை பிறழ்சாட்சியாக விசாரிக்க அரசு தரப்பில் அனுமதிகோரப்பட்டு, அதன்பேரில் அனுமதி வழங்கப்பட்டது**:-

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் போலீசார் விசாரித்தபோது தென்காசி கூலக்கடை பஜாரில் கடைஎண்140 ல் அரிசி கடை நடத்திவருமபோது எனது கடையில் ஹனிபாவின் தாயார் அரிசி வாங்கும் வகையில் ரூ.450/- பாக்கி வைத்திருந்தார் என்றும் அவர் தென்காசி குடியிருந்தபோது நான் பாக்கி கேட்டு வாங்குவதற்காக மவுண்ட் ரோடு வழியாக செல்லும்போது ஹனிபா வீட்டிற்கு சென்றேன் என்றும் அங்கிருந்த ஹனிபாவும் அலாவூதினும் நாளைவந்து வாங்கிக்கொள்ளுங்கள் என்று கூறினார்கள் என்றும் அப்போது அவரது வீட்டின் வாசலில் நிறைய காலணிகள் கிடந்தது என்றும் எனவே விருந்தாளிகள் யாராவது வந்திருப்பார்கள் என்று வந்துவிட்டேன் என்றும் மறுநான் காலையில் தற்செயலாக அந்த பகுதிக்கு சென்றேன் என்றும் அப்போது அவரது வீட்டிற்கும் எனக்கு தெரிந்த பலரது குரல்கள் கேட்டது என்றும் அதனால் நான் அங்கிருந்து அமைதியாக அவர்கள் பேசுவதை கேட்டுக்கொண்டிருந்தேன் என்றும் போலீசார் விசாரணையில் கூறியிருக்கிறேன் என்றால் சரியல்ல. அப்போது ஹனியா எதைபற்றியும் யோசிக்கக்கூடாது என்றும் சொர்ணத்தேவர் மகன்களை கொன்றுவிடவேண்டும் என்றும் செலவு பற்றி யோசிக்க வேண்டாம் என்றும் அப்போது அலாவூதினும் அதைப்போலவே பேசினார் என்றும் நான் இருப்பது தெரிந்து வெளியே வந்த அலாவூதின் என்னை விசாரித்தபோது பணம் வாங்க

வந்தேன் என்று கூறினேன் என்றும் எனவே அலாவூதின் அவரது தாயாரிடம் பணம் கொடுக்க சொன்னார் என்றும் அப்போது திறக்கப்பட்ட வீட்டை நான் பார்க்கும்போது வீட்டில் எனக்கு பரிட்சயமான அப்துல்லா, அன்சாரி, ஆர்.ஐமகன் மேஜிக்சுலைமான், மகன் சம்சுதீன், அசன்கனி, பசீர்முகம்மது, நாகூர்மீரான், காஜாமுகம்மது, மீரான் மைதீன், பஸ்முதீன், சுபகான், என்று அடையாளம் தெரிந்தவர்களும் அடையாளம் தெரியாத சிலரும் அங்கு பேசிக்கொண்டிருநதனர் என்றும் எனக்கு அது அசாதாரணமாக தெரிந்தது என்றும் போலீசாரிடம் கூறினேன் என்றால் சரியல்ல. நான் பணத்தை வாங்கிக்கொண்டு வந்தபின்னர் ள 14.08.2007 ம் தேதி மேலமுத்தாரம்மன் கோவில் தெருவில் உள்ள கடைக்கு சென்று அரிசி அனுப்பி விடும்படி கூறிவிட்டு என் கடையை திறக்க வந்தபோது கடை அமைந்துள்ள கூலக்கடை பஜாரில் அங்கும் இங்குமாக ஆட்கள் வெட்டு, குத்து என ஓடினார்கள் என்றும் எனவே நான் கடையை திறக்காமல் அங்கிருந்து ஓடிவிட்டேன் என்றும் அதன் பின்னர் இருதரப்பு மோதல் காரணமாக 6 நபர்கள் இறந்துபோனார்கள் என்று கேள்விப்பட்டேன் என்றும் நான் ஹனிபாவீட்டில் பணம் வாங்க சென்றபோது நடந்த அசாதரணமான கூட்டத்தின் தொடர்ச்சியாக நடந்த கொலைகள் என்று தெரிந்துகொண்டேன் என்றும் போலீசார் விசாரணையில் கூறியிருக்கிறேன் என்றால் சரியல்ல. நான் தற்போது கடைஎதுவும் நடத்தவில்லை. வாஞ்சிநகரத்தில் குடியிருக்கிறேன். எனக்கு குழந்தைகள் இல்லை.

செங்கோட்டையில் விவசாய நிலம் உள்ளது. என் நிலத்தின் அருகில் இஸ்லாமியர்கள் பெருமளவு நிலம் வைத்துள்ளார்கள் என்றால் சரியல்ல. நான் தினமும் இஸ்லாமியர்கள் வசிக்கும் பகுதியில் குடியிருப்பதாலும், விவசாயம் செய்து வருவதாலும் அவர்களுக்கு பயந்து எனக்கு தெரிந்த சம்பவத்தை கூறாமல் மறைத்து பொய் சாட்சி சொல்கிறேன் என்றால்சரியல்ல.